முதன்மை சார்பு நீதிமன்றம், பழனி

O.S. No. 335/2016

தேதி : 26–06–2023

(வா.சா.1–) : கலையரசி

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

குறுக்கு விசாரணை : (1 மற்றும் 4 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில்)

எனது மாமியார் பெயர் மாரியம்மாள். எனது மாமியார் மாரியம்மாள் தன் வாழ்நாளில் மொத்தம் 3 உயில் ஆவணங்கள் எழுதிவைத்துள்ளார். அவர் மூன்றாவதாக எழுதிவைத்த உயில் ஆவணத்திற்கு பிறகு ஒரு வருடம் கழித்து இறந்துபோனார். அவர் மூன்றாவாதாக எழுதிவைத்த உயில் பத்திரம் பதிவு செய்யப்பட்ட பத்திரம் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த மூன்றாவது உயில் சாசனம் செல்லாது என்று கேட்டுதான் வாதிகள் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள். என் மாமியார் எழுதிவைத்த 30.12.2014 தேதிய வா.சா.ஆ.4 உயில் ஆவணம் பற்றிய விபரம் எனக்கு தெரியும். அந்த உயில் சாசனத்தின்படி தான் நான் சொத்தில் பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். பிராது தபசில் 2–வது அயிட்ட சொத்திற்கு மாரியம்மாள் இறந்தபிறகு 1 மற்றும் 2 பிரதிவாதிகள் வீட்டுவரி, மின்கட்டணம் ஆகியவற்றை செலுத்தி வருகிறார்கள் என்றால் எனக்கு தெரியாது. ஆனால் நானும் அந்த கட்டணங்களை கட்டவில்லை. மேற்படி 2–வது அயிட்ட சொத்திற்கு மாரியம்மாள் பெயரில் தான் பட்டா உள்ளது. அந்த பட்டா, மின் இணைப்பு, வீட்டுவரி ஆகியவற்றை 1 மற்றும் 2 பிரதிவாதிகள் பெயரில் பெயர் மாற்றம் செய்யக்கூடாது என்று நான் ஆட்சேபணை மனு கொடுத்துள்ளேன். அதனால் தான் அவ்வாறு பெயர் மாற்றம்

செய்யவில்லை. மாரியம்மாள் கிரையம் பெற்ற அசல் கிரைய ஆவணம் 1 மற்றும் 2 பிரதிவாதிகள் வசம்தான் உள்ளது. 18.08.2006, 30.12.2014 மற்றும் 11.06.2015 தேதிய மாரியம்மாள் எழுதிவைத்த அசல் உயில் ஆவணங்கள் 1 மற்றும் 2 பிரதிவாதிகள் வசம்தான் உள்ளது என்றால் சரிதான். 11.06.2015 தேதிய உயில் ஆவணத்தில் என்னுடைய பெயரை விட்டுவிட்டு எழுதிவைத்துள்ளதால் தான் அந்த உயில் பத்திரத்தை மோசடியான ஆவணம் என்று சொல்கிறேன். அவ்வாறு என்னுடைய பெயரை விட்டுவிட்டு ஏன் உயில் ஆவணம் எழுதப்பட்டுள்ளது என்று என்னுடைய ஆட்சேபணையை மாரியம்மாளிடம் கேட்டேன், அதற்கு அவர் அதுபற்றி தனக்கு தெரியாது என்றும், தன்னை கூட்டிச்சென்றதாகவும், திரும்பிகொண்டு விட்டுவிட்டதாகவும் அந்த உயில் ஆவணம் எழுதியது பற்றி தனக்கு தெரியாது என்றும் சொன்னார். 11.06.2015 தேதிய உயில் ஆவணம் எழுதப்பட்ட காலத்திலும், அதற்கு பின்னரும் மாரியம்மாள் தெளிந்த மனநிலையிலும், நல்ல உடல் நிலையிலும் இருந்தார் என்றால் சரியல்ல. மாரியம்மாள் நல்ல உடல்நிலையிலும், சுயநினைவுடனும், பிறர் தூண்டுதலின்றியும், நல்ல நியாபகசக்தியுடனும் 11.06.2015 தேதிய உயில் சாசனத்தை எழுதிவைத்துள்ளார் என்றால் சரியல்ல. மாரியம்மாளை ஏமாற்றியோ, மோசடி செய்தோ மேற்படி உயில் ஆவணம் எழுதப்படவில்லை என்றால் சரியல்ல. மேற்படி தாவா உயில் சாசனத்தின்படி தாவா 2-இலக்கச் சொத்து 1 மற்றும் 2 பிரதிவாதிகளுக்கு மட்டும் தான் பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. மாரியம்மாள் இறந்தபிறகு தாவா 2 இலக்க சொத்தை 1 மற்றும் 2 பிரதிவாதிகள் மட்டும் தான் அடைநத் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. 2-ம் பிரதிவாதி மணிகண்டன் இறந்துவிட்டார். அவர் இறந்த பிறகு அவரது வாரிசுகளாக 4 முதல் 6 பிரதிவாதிகளை வழக்கில் கட்சி சேர்த்துள்ளோம். தாவா 1 இலக்க சொத்து காலி மனையிடம் என்றால்

சரிதான். அந்த சொத்தின் மதிப்பு எவ்வளவு என்று தெரியாது. தாவா 2 இலக்க சொத்தின் மதிப்பும் எனக்கு தெரியாது. தாவா சொத்துக்களின் உண்மையான மதிப்பை மறைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. 11.06.2015 தேதிய உயில் ஆவணத்தின் ஜெராக்ஸ் நகலை பிராதுடன் தாக்கல் செய்துள்ளோம். அந்த ஆவணம் பத்திர அலுவலகத்தில் நகல் எடுத்தேனா என்றால் 3–ம் பிரதிவாதியிடம் அந்த நகலை 2–ம் பிரதிவாதி கொடுத்துள்ளார், 3–ம் பிரதிவாதியிடமிருந்த அந்த நகலை வாங்கினேன். என் மாமியார் இறந்தபிறகு தான் அந்த பத்திரம் பற்றிய விபரம் தெரியவந்து அதன் நகலை வாங்கினேன். பிராது 1 இலக்கச் சொத்தில் மட்டும் தான் எங்களுக்கு பாக உரிமை உள்ளது என்றும், 2 இலக்கச் சொத்தில் எங்களுக்கு பாகம் கிடையாது என்றும் சொன்னால் சரியல்ல. எங்கள் பாகம் குறித்து தவறான பரிகாரம் கேட்டு இந்த வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை: (3–ம் பிரதிவாதி தரப்பில்)

இல்லை.

மறு விசாரணை: இல்லை.

J JEYA SUTHAHAR

Digitally signed by J JEYA SUTHAHAR
Date: 2023.06.26 17:40:31 +0530

முதன்மை சார்பு நீதிபதி,
பழனி.